கூடுதல் சார்பு நீதிமன்றம், பழனி.

M.C.O.P.No. 106/2024

<u>தேதி : 18.03.2025</u>

<u>(ம.சா.1) – திரு. மாதவராசு</u>

<u>சாட்சி அழைக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்பட்டு எதிர்மனுதாரர்கள் தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்.</u>

<u>குறுக்கு விசாரணை : – (1–ம் எதிர்மனுதாரர் தரப்பில்)</u>

1. கடந்த 21.02.2024 அன்று 1–ம் எதிர்மனுதாரரின் ஓட்டுனர் அதிவேகமாகவும், அஜாக்கிரதையாகவும் வாகனத்தை ஓட்டி வந்து விபத்தை ஏற்படுத்தியது பொய் என்று சொன்னால் சரியல்ல. நான் தான் எதிரே வந்து அவருடைய வாகனத்தில் மோதினேன் என்றால் சரியல்ல. எனக்கு காயம்பட்ட ஒரே காரணத்தினால் தான் என் மேல் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்படவில்லை என்றால் சரியல்ல. மேற்படி விபத்தின்போது வாகனமானது 2–ம் எதிர்மனுதாரர் காப்பீட்டு நிறுவனத்தில் காப்பீடு செய்யப்பட்டுள்ளதால் 2–ம் எதிர்மனுதாரரிடமிருந்தே இழப்பீடு பெற்றுக்கொள்ள வேண்டுமென்றும், 1–ம் எதிர்மனுதாரர் எவ்வித இழப்பீடும் செலுத்த கடமைப்பட்டவரல்ல என்றும் சொன்னால் சரியல்ல.

<u>குறுக்கு விசாரணை : – (2–ம் எதிர்மனுதாரர் தரப்பில்)</u>

1. விபத்து நடந்தது பழனி மலையடிவாரம், தெற்கு கிரி வீதி சாலை என்றால் சரிதான். அப்போது நான் TN 57 AX 2400 என்ற TVS 50 வாகனத்தில் தெற்கிலிருந்து வடக்கு நோக்கி சென்றதாகச் சொன்னால் சரிதான். மேற்படி வாகனம் எனக்கு பாத்தியப்பட்டது. விபத்து சமயம் மேற்படி வாகனத்தை ஓட்டுவதற்கு எனக்கு ஓட்டுநர் உரிமம் இல்லை என்று சொன்னால் சரிதான். மேற்படி வாகனத்திற்கு விபத்து சமயம் காப்பீடு இல்லை என்று சொன்னால் சரிதான். விபத்து சமயம் எனக்கு தலை மற்றும் தோள்பட்டையில் காயம் என்றால் சரிதான். விபத்து சமயம் நான் தலைக்கவசம் அணியவில்லை என்றால் சரியல்ல. தலைக்கவசம் அணிந்திருந்ததாக வழக்கிற்காக பொய்யாக சாட்சியமளிப்பதாகச் சொன்னால் சரியல்ல.

2. விபத்து சமயம் ஓட்டுனர் உரிமம் இல்லாமலும், காப்பீடு செய்யப்படாத வாகனத்தை அதிவேகமாகவும், அஜாக்கிரதையாகவும், கவனக்குறைவாகவும் சாலையின் மையப்பகுதியைத் தாண்டி வலதுபுறம் சென்று விபத்தை ஏற்படுத்தியதாகச்

சொன்னால் சரியல்ல. விபத்து எனது கவனக்குறைவு காரணமாகத் தான் நடந்துள்ளது என்றால் சரியல்ல. எதிரே வந்த இருசக்கர வாகனத்தை ஓட்டிவந்த ஓட்டுனர் மெதுவாகவும், கவனமாகவும் தான் ஓட்டி வந்தார் என்றும், விபத்திற்கு அவர் காரணம் இல்லை என்றும் சொன்னால் சரியல்ல. மேற்படி விபத்து எனது கவனக்குறைவால் தான் நடந்தது என்பதால் எதிர்மனுதாரர் எவ்வித இழப்பீடும் கொடுக்க கடமைப்பட்டவரல்ல என்றால் சரியல்ல. TN 94 C 2039 என்ற இருசக்கர வாகனத்தை ஜெயபால் என்ற ஜெயராமன் தான் ஓட்டி வந்தாரா என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது.

3. எதிரே வந்த இருசக்கர வாகனத்தின் ஓட்டுனருக்கு விபத்து சமயம் ஓட்டுனர் உரிமம் கிடையாது என்ற விபரம் எனக்கு தெரியாது. ஓட்டுனர் உரிமம் இல்லாத நபரைக் கொண்டு வாகனத்தை 1–ம் எதிர்மனுதாரர் இயக்கியுள்ளதால் 2–ம் எதிர்மனுதாரர் இழப்பீடு செலுத்த கடமைப்பட்டவரல்ல என்று சொன்னால் சரியல்ல. மேற்படி விபத்தில் ஏற்பட்ட காயங்கள் பூரண குணமடைந்துவிட்டது என்றும், எனக்கு நிரந்தர ஊனம் என்று சொல்வது பொய் என்றும் சொன்னால் சரியல்ல. மருத்துவ பில்கள் மற்றும் மருத்துவக் குறிப்புகள் வழக்கிற்காக உற்பத்தி செய்துள்ளேன் என்றால் சரியல்ல. எதிர்கால மருத்துவச் செலவு இருப்பதாக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. அதற்கான மருத்துவக் குறிப்புகள் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. மனுதாரர் கோரியுள்ள இழப்பீடு அதிகப்படியானது என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள ஊனச்சான்றில் ஊனத்தின் சதவிகிதம் அதிகப்படியானது என்றால் சரியல்ல.

K BHARATHI

Digitally signed by K BHARATHI
Date: 2025.03.20 16:51:24 +0530

கூடுதல் சார்பு நீதிபதி,
பழனி.